கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

—திருக்குறள்

புத்தகம் 3	பிங்கள௵ பங்குனி மீ மார்ச்சு மீ 1918	சஞ்சிகை 6

கடவுள் வணக்கம்

அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறா
யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகியல்லவாகிப்
பரமாகிச்சொல்லரியபான்மையாகித்
துகளறுசங்கற்பவிகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச்சுத்தமாகி
நிகரில்பசுபதியானபொருளைநாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பானினைதல்செய்வாம்.

—தாயுமானவர்.

சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி யெங்கணும்நிறைந்தவெந்தாய்
தாழ்ச்சிமற்றெங்கும் தவிர்ந்துநின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி யான்சேரும் வகையருளாய்வந்தே.

—நாலாயிரப்பிரபந்தம்.

மனவாக் கணுகா மறைந்தவான் செஞ்சுடரே
இனமாதி யற்ற விறையே நிராமயமே.

அங்கிங் கெனவொண்ணு வகண்டபரி பூரணமாய்
எங்கு நிறைந்த விறையே நிராமயமே.

—மஸ்தான்

1918ஞு மார்ச்சு—ஏப்ரல்மீ

பிங்கள ஞு பங்குனி மீ

ர. பு		குரு.	கே.
	மார்ச்சுமீ 15உ க்குராசி சக்கரம்.		ச.
சுக்.			கு.
ரா.			

உத்தராயணம் சிசிரருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092.	*கலியுகம் 5019	ஹிஜரி 1335

யோகம்.	இங் மீ.	தமிழ் மீ.	வாரம்.	தி, நக்ஷத்திரம், முதலியன.
சி	14	1	வி	துவி 36-27, உத்திர 2-54, ரேவ 55-52, ரா
அ	15	2	வெ	திரி 30-49, அசு 55-4, ரா 15-57, அ.(யோக.
சி	16	3	சனி	சௌ 25-40, பர 51-56, தி 17-48.
நா	17	4	ஞா	பஞ் 21-9, * கிரு 49-32, தி 20-44.
அ	18	5	திங்	ஷஷ் 17-29, ரோ 48-5, தி 28-34, சித்தயோ
சி	19	6	செவ்	ஸப் 14-44, மிரு 47-40, தி 1-59. [கம்.
சி	20	7	புத	அஷ் 13-15, திருவா 48-25, தி 8-56.
அ	21	8	வி	நவ 12-56, புனர் 50-23, தி 20-23.
ம	22	9	வெ	தச 13-57, பூசம் 53-57, தி 11-27.
ம	23	10	சனி	ஏகா 16-9, ஆயி 8-2, தி 27-58, ஏகாதசி.
ம	24	11	ஞா	துவா 19-32, மக 60-0, ரா 0-48.
ம	25	12	திங்	திர 23-50. மக 3-42, தி 25-45, காமதகனம்.
சி	26	13	செ	சதுர் 28-50, பூர 9-51, தி 29-48. பங்குனிஉத்
அ	27	14	புத	○ பௌ 34-8, உத் 16-22, ரா 9-29, ஹோலி.
சி	28	15	வியா	பிர 39-27, ஹஸ் 23-53, ரா 14-31.
நா	29	16	வெ	துவி 43-53, சித் 28-28, ரா 13-23.
அ	30	17	சனி	திரி 47-34, சுவா 33-32, ரா 18-23. (யோக
ம	13	18	ஞா	சௌ 50-0, விசா 38-29, ரா 18-39, மிருத்தி
சி	1	19	திங்	பஞ் 51-7, அனு 41-29, ரா 25-31, சித்தயோ
உ	2	20	செ	ஷஷ் 51-25, கேட் 43-16. (கம்.
ம	3	21	புத	ஸப் 50-9, மூல 43-43, தி 3-25, ரா 9-13.
சி	4	22	வி	அஷ் 47-40, பூரா 43-12, தி 7-31.
சி	5	23	வெ	நவ 44-8, உத்தி 41-31, தி 12-38, ரா 20-35.
சி	6	24	சனி	தச 38-57, திருவோ 38-59, ரா 17-54.
ம	7	25	ஞா	ஏகா 34-24, அவி 35-44, ரா 22-3, ஏகாதசி.
சி	8	26	திங்	துவா 28-59, சத 32-0, ரா 16-16. (ராத்திரி
ம	9	27	செ	திர 24-4, பூரட் 27-55, ரா 19-19, மாதசிவ
சி	10	28	புத	சதுர் 16-58, உத்திரட் 23-45, ரா 20-58.
சி	11	29	வியா	● அமா 11-3, ரேவ 19-36. (அமா விரதம்.
அ	12	30	வெ	பிர 5-22, துவி 54-36, அசு 15-58, தி 6-33, ரா 7-52, தெலுங்கு வருஷப்பிறப்பு.

(தமிழ் மீ. column, rows 2–8, printed vertically: பிங்கள-பங்குனீ)

(இங் மீ. column, rows 3–9 of April, printed vertically: 1918-ஏப்ரல்மீ)

கடவுளும் அவரையடையும் வழியும்

உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையாரவர்
தலைவரன் னவர்க்கே சரணாங்களே.

கடவுள்யார்? எவன் இப்பிரபஞ்சத்தை முதன் முதல் தோற்றுவித்தானோ, எவன்தன் ஆஞ்ஞையின் மூலம் இப்பிரபஞ்சத்தை நடப்பிக்கின்றானோ, எவன் தன்னிடத்தில் இப்பிரபஞ்சத்தை லயமாக்கிக் கொள்ளுகின்றானோ, லயமாக்கியபின் எவன் தன்னிடத்திருந்து மீள இப்பிரபஞ்சத்தை உண்டாக்குகின்றானோ அவனே கடவுள். அவன் நித்தியமாயுள்ளவன்; பரிசுத்தமானவன்; சுயேச்சையுள்ளவன்; சர்வவல்லமையுள்ளவன்; சர்வஞ்ஞன்; பரமகாருண்யப்பிரபு; நிர் விசேஷமானவன்; நிர்விகாரமானவன்; நிச்சலமாயுள்ளவன்; மேருகிரியைப் போல் ஸ்திரமாயுள்ளவன்; சிந்மயன்; அநிர்வசநீயமானவன்; குருவுக்கெல்லாங் குரு.

இத்யாதி குணவிசிஷ்டனாகியுங் குணரகிதனாகியுமுள்ள ஈச்சுவரனையாம் காணமுடியுமோ? கட்புலனுக்குப்புலனாகாவிடின் கடவுள் இருக்கிறாரென்பது பொய்யல்லவோ? என்று சிலநாஸ்திகர்கள் வாதிக்கக்கூடும். நாம் இரவில் வானமெங்கும் நட்சத்திரங்கள் பொலியக்காண்கின்றோம். ஆனால், அவைகள் பகலில் சூரிய வெளிச்சத்தில் மறைந்து நம் கண்களுக்குத் தோற்றப்படுவதில்லை. அக்காரணத்தைக்கொண்டு பகலில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லையென்று சொல்லலாமா? அவ்வாறே அஞ்ஞானத்தால் சூழப்பட்ட நாம் ஈச்சுவரனைக் காணப்பெறாமையால் கடவுள் இல்லையென்று சொல்லுதல் தகாது.

'அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகுசிந்தை யிடுதிரியா—என்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ்புரிந்த நான்' என்று பூததாழ்வார் கூறியபடி ஞானவிளக்கேற்றி அகக்கண்கொண்டு பார்ப்பவர்க்கே கடவுள் புலப்படுவார். அவ்வாறன்றி புறக்கண்ணாகிய முகக்கண்கொண்டு நோக்குவோர்க்கு எதிர்ப்படார்.

'முகத்துக்கண் கொண்டு பார்க்கின்றமூடர்காள்
அகத்துக்கண் கொண்டு பார்ப்பதே ஆநந்தம்.'

இதுபற்றியன்றோ அப்பரும்,

'விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்

உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடைய முன்னிற்குமே.' என்று கூறிப் போந்தனர். (உணர்வு-ஞானம்; உறவு-அன்பு, பக்தி)

நாம் ஒரு குலாலனுடைய சாலையிற் புக்கின் ஆங்குக்குடம், பானை, சட்டி, மிடா, ஜாடி முதலிய பற்பலவுருவமைந்த பாண்டங்களிருக்கக் காண்கின்றோம். அப்பாண்டங்கள் உருவமாத்திரத்தில் வேறுபட்டிருப்பினும் அவை யாவும் மண்ணாற் செய்யப்பட்டனவேயாகும். காரியமாகிய பாத்திரங்கள் பலவாயினும் காரணமாகிய மண் ஒன்றுதல்போல கடவுள் ஒருவரேயாயினும் வெவ்வேறு காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறு நாமரூபங்களால் பூஜிக்கப்படுகின்றார். ஓர் நகரத்திற்குப் போக அநேக வழிகளிருப்பது போல கடவுளைக்காண்பதற்கு பலவகை மார்க்கங்களும், சாதனங்களும்ஏற்பட்டிருக்கின்றன. அவரது அநந்தகோடி ரூபங்களியாவையும் ஞானிகளே கண்டு களிப்பரன்றி ஏனையோர்க்கு அது சாத்யமன்று. அவ்வநந்த கோடி யுருவங்களில் ஒன்றை மாத்திரம் கண்டவன் அதுதான் கடவுளின உருவம் என்று உணர்கின்றான். அவ்வாறே உலகிலுள்ள பற்பல சமயத்தாரும்,

'தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமல மென்ன, தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாருமஃதே, வாள் கண்டகண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார், ஊழ் கொண்ட சமயத்தன்னா னுருவு கண்டாரை யொத்தார்'

என்று கல்வியிற் பெரியார கூறியதைப்போலும், யானை கண்ட குருடர் போலும் தாம் தாம் கண்டதையே கடவுளின் உண்மை யுருவெனக் கொண்டு பூஜிக்கின்றனர்.

'முதலொன்றானை முதுகுடன் வாலுந்
திதமுறு கொம்புஞ் செவி துதிக்கைகான்
மதியுடனந்தகர் வகைவகைபார்த்தே
யதுகூறலொக்கு மாறு சமயமே'

உலகத்தில் நதிகள் பலவும் எவ்வாறு சமுத்திரத்தைச் சென்றடைகின்றனவோ அவ்வாறே எந்த தெய்வத்தை எந்த மதத்திலிருந்து வணங்கினும் கடைசியில் எல்லாம்பரமாத்மாவான எம்பெருமானையே அடைகிறது. ஞானங்களிந்து நலங்கொண்ட நம்மாழ்வாரும்,

'நும்மின்கவி கொண்டு நும்நும் இட்ட தெய்வமேத்தினால்
செம்மின்சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே'

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இறைவனும் எந்த பக்தன் எந்த மதத்திலிருந்து எந்த வுருவைக் கடவுளுடைய உண்மை யுருவென்று கொண்டு வணங்குகின்ருனே, அந்தமதத்திலேயே அவ்வுருவத்துடனே அப்பக்தன்முற் ருேன்றிகாட்சி யளிக்கின்ருர்.

'எத்தேயத்தெத்திறத்தோ ரெவ்வருணத்தெவ் வுருவி னென்னையாய்ந்தார், அத்தேயத்தத் திறத்தோர்க்கவ் வருணத் தவ்வுருவினவர் நேராவன், முத்தேவர்முத்தொழிலு முக்குண முங்கடந்து மறை முடிவின் முத்தி, வித்தாகித்தனி நின்றபரப் பிரமப்பழம் பொருள்யான் மெய்க்கொள்வாயே.

ஆதலான், அன்பர்களே! காரியமாகியமணி பலவாயினும் காரணமாகிய பொன் ஒன்ருதல்போல, கடவுள் பல வென்று பிரமிக்காது 'தெய்வம்-ஒருவனே யென்று உணரவல்லீரேலரு வினைக ளோந்துமறும்' என்ற ஔவைப் பிராட்டியின் அருமைத் திருவாக்கை அகத்திற்கொண்டு கடவுள் ஒருவரே என்றுதெளிந்து அன்னவரடிகளையடையும் மார்க்கத்தில் ஒழுகவேண்டும்.

கடவுளை யடைய விரும்பினவர்கள் அகங்காரம் மமகார மற்று, முற்றும் நம்மை மறந்து, கடவுளே அடைக்கலமென்று மனமுருகி அகங்குழைந்து,

'பக்தியாலுள்ளே பரிந்தானைத்தானேக்கில்
முத்திக்கு மூலமது' என்றும் போந்த பிரமாணப்படி அன்னவர் பால் பக்தி செலுத்தவேண்டும். பிறவியாகியகடலை நீந்தி முத்தியாகிய கரையைச் சேர்வதற்கு இதுவே மார்க்கம்.

'பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர்.'

இவ்வாறு கடவுள்பால் பக்தி செலுத்தி முத்தியடைவதற்குக் காரணமாயுள்ளது அன்பேயாம். அன்பில்லாதவொருவன் எத்தகைய பூஜை வேள்வி செய்திடினும் இறைவனைக்காணுன் என்பது சான்ருேர் துணிவு.

'என்பேவிறகாயிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகியகங்குழைவார்க்கன்றி
என்பொன்மணியினை யெய்த வொண்ணுதே.' என்றும்,

'அன்பு சிவமிரண்டென்பர் அறிவிலார்
அன்பேசிவமாவதாரு மறிகிலார்
அன்பேசிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருப்பாரே' என்றும் போந்த

பிரமாணங்களால் அன்பைத்தவிர கடவுளை யடைவதற்கு ஏது ஒன்றுமில்லை யென்று வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது அன்பின்றி வேறு வகையால் கடவுளையடைய விரும்புதல் புணையின்றி கடல் கடக்க நினைத்தலுக் கொப்பாகும். விரிக்கிற் பெருகும். முடிவாகக்கூறுமிடத்து,

'சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்-போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழியரிசிக்கேநாம்.' என்பதற்கிணங்க நம்குஷ்டிபர்தையை நீக்கும் பொருட்டு நமக்கெவ்வளவு லௌகிகத் தொல்லைகளிருந்தபோதிலும் அவற்றிலேயே முற்றும் கருத்தைச் செலுத்தி நம் வாணாளை வீணாளாக்காமல், 'நெருநலுளனொருவனின்றில்லையென்னும், பெருமையுடைத்திவ்வுலகு' என்று திருவள்ளுவர்கூறியபடி நாளைத்தினம் நம்காயமிருக்கு மென்பது நிச்சயமில்லையாதலின்,

'காலன் வருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண்கடைவாய்படு முன்னே-மேல்விழுந்து
உற்றாரழுமுன்னே யூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு' என்றபடி நாம் அரோக திட காத்திரராயுள்ள பொழுதே நமது மனத்தை விஷயங்களிலே அதிகமாகச் செல்லவிடாது 'கள்ளக்காதல னிடத்தன்புகலந்து வைத்தொழுகும் உள்ளக்காரிகை மடந்தை'போலும், தாமரையிலைத் தண்ணீர்போலும், சிந்தை யெல்லாம் பரமாத்மாவாகிய கேசவனிடத்திலேயே செலுத்தி பக்திசெய்து அன்னவன் கருணைக்குப் பாத்திரராகி வாழ்வோமாக. விரிவஞ்சியிம் மட்டோடு விடுத்தனம்.

'அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு.'
'கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவன்
நற்றாடொழாரெனின்.'

சேந்தமிழ்ச் சிறுவன்,
கூத்தப்பாக்கம்.

உபவாசமிருத்தல்

நமது தேசத்தில் அநேகமாய் அநேகர்கள் அடிக்கடி விரதமிருக்கிறார்கள். திங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு முதலிய கிழமைகளிலும் அமாவாசை, பௌர்ணமை; கார்த்திகை, மாசப் பிறப்பு, வருஷப்பிறப்பு, சிவராத்திரி, திருவாதிரை வைகுண்ட ஏகாதசி, தைப்பூசம், பங்குனி உத்திரம், ராமநவமி முதலிய விசேஷ தினங்களிலும் திதிகளிலும் இன்னும் எத்தனையோ நற்காலங்களிலும் சைவர்களும் வைஷ்ணவர்களும் அவரவர்கள் கொள்கைக்குகந்த நாட்களில் உபவாச மிருக்கிறார்கள். இப்படி அடிக்கடி விரதமிருப்ப தேனென்று கவனிப்பவர்கள் நம்மிற் சிலரே. ஆனாலிதை யாழ்ந்து பார்த்தாலோ, இது இகபர மிரண்டிற்கும் உதவியாயிருப்பதாகத் தெரிகிறது. முற்காலத்திலே, நம் தேசத்திலே குருகுல வாசம் செய்கையிலே, மாணவர்கள் சாஸ்திரங்கள் கற்றுக் கொள்ளும் போது உபவாசமிருந்ததாகத் தெரியவருகிறது. இன்னும், காட்டுமனிதர்களுங்கூட சில சமயங்களில் நோன்பு அனுசரிக்கிறார்களென்று கேள்வி. திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையிலிருக்கும் "முதுவார்" என்னும் ஓர் காட்டு ஜாதியார்கள் விரதமிருப்பதை இவ்வியாசம் எழுதுபவனாகிய நானே நேரில் பார்த்துள்ளேன். இந்தியாவில் ஆதிகாலத்திலிருந்த தபசிகளும் யோகிகளுங் கூட விரதமிருந்தார்களென்று நூல்கள் மூலமாயறிகிறோம்.

இது இவ்வாறிருக்க, உபவாச மிருப்பவர்கள் மற்றை நாட்களைவிட நோன்பு தினங்களில் மனோ வாக்கு காயத்தில் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இவ்வித மிருப்பதால் பகவான் மேல் பக்தியுண்டாவதற்குச் சந்தேகமேதேனு முண்டோ? இல்லவே இல்லை. இக்காரணங்களை யெல்லாம் கவனித்தல்லவோ நம்முன்னோர்கள் விரதங்கள் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இங்கு ஆத்ம சம்பந்தத்தை விட்டுவிட்டு, உபவாசத்தினால் உடம்பிற்கு உண்டாகும்நன்மைகளை மட்டும் சொல்லப்படும்.

விரதமிருக்கும்போது நாம் ஒரு வேளை மட்டும் உணவு உட்கொள்கிறோம். இப்பொழுது ஜீரணக்கருவிகளுக்கு வேலை

யில்லாமலிருப்பதால் அவைகள் பலனடைகின்றன. விரத மிருப்பதாலேயே அநேக வியாதிகளை சௌக்கியப்படுத்தலாம்.

"மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கருந்திய
தற்றது போற்றியுண்ணின்" என்றார் நாயனாரும். அதாவது ஜீரணிக்கத்தக்க உணவு உட்கொண்டால் மருந்தேவேண்டுவதில்லை. விரதமிருப்பதால் எப்படி நோய்கள் குணமாகுமென்று ஓர் கேள்வி கேட்கலாம். ஆகாரம் வயற்றிலில்லாமலிருக்கும்போது மூளையிலிருக்கும் கழிவுகளும் திரேகத்திலிருக்கும் அசுத்த அன்னிய பதார்த்தங்களெல்லாம் உணவாக மாற்றப்படுகின்றன இவ்விதம் ஜீரணமானவுடன் சரீரத்திற்கு நோய்களெல்லாம் போய் சௌக்கிய முண்டாகிறது. புத்தி சுவாதீனமில்லாதவர்களையுங்கூட உபவாசத்தின் மூலமாய் குணமாக்கலாமென்றால், மற்ற வியாதிகளை நாம் எவ்வளவு அற்பமாயெண்ண வேண்டும். விரதமிருப்பதும் நோய்களைப் போக்குவதற்கு ஓர் சுலபமான வழியே. "உண்மையான நல்ல பசியானது திரேக மனோசம்பந்தமான வியாதிகளைக்கண்டிக்கிற" தென்று மைகிகன் சர்வகலாசாலை போதனாசிரியரான டாக்டர் டியூவே என்பவர் அறிவிக்கிறார். "உபவாசத்திற்கு மேற்பட்ட தவம் இல்லை. ஆகையால் உபவாச மிருப்பது மிகவும் புண்ணியம் அளிப்பதாம். உபவாசம், சக்தியில்லாதவனுக்குச் சக்தியைக் கொடுப்பது, புண்பட்டவனுக்கு புண் ஆற்றுவது, நோயுள்ளவனுக்கு ஔஷதமாகிறது, கோபங்கொண்டவனின் கோபத்தை யகற்றுகிறது, வறுமையால் கஷ்டப்படுகிறவனுக்குச் செல்வத்தை யளிப்பது, தேகத்திலுள்ள அழுக்குகளைப் போக்குவதற்காகவும் இந்திரியங்களை விஷயப்பற்று நீங்க உலாத்துவதற்காகவும்; ஒரு வேளை புசிப்பதையும், உபவாச மிருப்பதையும் விரதங்களாக மனிதர் கொண்டிருக்கின்றனர்" என்று ஜெகதீச அய்யர் தம்முடைய "இந்து புண்ணியக் கதைகள்" என்னும் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

விரதமிருப்பவர்கள் யாவரும் குறைந்த பட்சம் 12 மணி நேரமாயினும் யாதொன்றும் சாப்பிடாமலிருக்கவேண்டும். அப்படி யில்லாமல் காலையிற் வயிறு நிறைய சிற்றுண்டி கொண்டு காப்பிப்பானம் பருகி, மத்தியானம் நானாவித காய்கறிகள், பலகாரம் பாயசம் முதலியவைகளுடன் போஜன முண்டதுபோதாமற், இராவிலும் பலகாரங்களுடன் டீ அல்

லது காபி குடிக்கின்றார்கள். பலர்விரதம் எப்பொழுது தான் வருமோவென்று எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பார்கள் இச்சாப்பாட்டு ராமன்கள்.ஐயோ!குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவர்கள் இவர்கள் தான். உபவாச காலங்களில் கடைசியில் சாப்பிடும்போது கடின ஆகாரங்களையாவது, அளவுக்கு மிஞ்சி அதிக உணவையாவது உட்கொள்ளலாகா தென்றும் மீறி உண்டால் பல நோய்களுக்கிடமாகு மென்றும் இவ்விஷயத்தில் நூதனமாய் ஆராய்ச்சிசெய்த பல டாக்டர்கள் சொல்லுகிறார்கள். உபவாச மிருக்கும்போது தண்ணீர் மட்டும் பருகலாமேயன்றி இறுதிபரியந்தம் யாதொன்று மருந்த லாகாது. தற்காலத்தில் நம்மவர்கள் அனுஷ்டிக்கும் விரதங் களிலெல்லாம் மகத்வம் பொருந்திய ஏகாதசி யொன்றுமட்டுமே ஒழுங்காயும் பயபக்தியாயும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிற தென்று சொல்லலாம்.

காலை போஜனம் (பழையசாதம்)கொள்ளவேண்டுமென்று ஒரு சாஸ்திரத்திலும் சொல்லவில்லையே. நாசரீகத்திற் சிறந்த வீரர்களான கிரேக்கர்களுங்கூட மிகு போஜனம் கூடாதென்று நெடுங்காலத்திற்கு முன்னரே பகிரங்கமாய்த் தெரிவித்திருக்கி றார்கள். "ஒரு வேளை யுண்போன் யோகி; இருவேளை யுண் போன் போகி, மூன்றுவேளை யுண்போன் ரோகி" என்னும் பண்டைக்காலப் பழமொழியும் வழங்கி வருகின்றதல்லவா? காலை உணவைத் தள்ளி இரண்டு வேளை சாப்பிட்டு அதனால் மேன்மை யடைந்த ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார். "எனக் குத் தலைவலி 30 வருஷகாலமாக விருந்தது, காலை போஜ னத்தைவிட்டுவிட்டதிலிருந்து திரேகபாரம் குறைந்துகொண் டேவருகிறது. கண்கள் பிரகாசமாயின. தோல் சுத்தமாயும் மெதுவாயும் காணப்படுகிறது. காலையில் ஒன்றும் சாப்பிடா மற்றான் நான பிரசங்கத்திற்குப் போகிறேன். அப்பொழுது எனக்கு கஷ்டமாவது சோகமாவது கிடையாது." நாமேன் காலையுண்டியைத் தள்ளி இருவேளை புசிக்கலாகாது. இப்ப டிச் செய்வதால் இதுவே ஓர் விரதமாமன்றோ? இதை எச் சாதியாரும் எம்மதஸ்தரும் பின்பற்றலாம்.

ஆகையால், அன்பர்களே! நாம் அடிக்கடி விரதமிருக்க வேண்டும். இல்லாவிடிலோ நாள் ஒன்றுக்கு இருவேளைக்கு மேற் புசிக்காமலிருக்கவேண்டும். இவ்விரண்டும் கஷ்டமாய்த் தோன்றுமானால் அளவிற்கு மிஞ்சி அன்னம் உட்கொள் ளாமலிருக்க வேண்டும். *R*. நாராயண ஸ்வாமி,

பிரசிடெண்ட்,

இந்திய கல்வி அபிவிர்த்தி சங்கம்,

தேவாரம், மதுரை ஜில்லா.

தமிழ் வழங்கிய எல்லை

தொண்டை மண்டல சதகம்

படவேங் கடற்கட லன்னதொல் காப்பியப் பாயிரஞ்சொல்
விடவேங் கடலின்றி யேபனம் பாரர்மற் றெல்லை சொல்லக்
கடவேங் கடலன்ன செந்தமிழ்க் கேயென்று காட்டுதற்கு
வடவேங் கடந்தென் குமரியென் றார்தொண்டை மண்டலமே.

பொழிப்புரை

கடல்போல் பரப்பமைந்த தமிழ்ச் சொல்லுக்கு நிலவரைப்புக் காட்டுதற்கு எல்லை யறிகுறியாக வடக்கின்கண் வேங்கட மலையையும், தெற்கின்கண் கன்யாகுமரி முனையையும், அக வெல்லையாகவும், இதனை யுள்ளிட்ட நிலங்கள் தொண்டை மண்டலமென்றும், நெடுங்கணக்கேற்படுத்திய அக்ஷரகாலமாகிய அகத்தியமென்னுந் தமிழிற்கு ஆதிகாலமென்பதாம். இத்தமிழுக்குப் பரமாசாரியராகிய அறுமுகக்கடவுளிடத்துத் தமிழறிந்த அகத்தியரது மாணாக்கர் பன்னிருவருள், "திரணதூமாக்கினி" என்னும் இயற்பெயருடைய தொல்காப்பியர், தன்பெயரால் செய்த "தொல்காப்பியம்" என்னும் நூலுக்கு அவ்வகத்தியர் மாணாக்கரும், தன்னோடொருங்குற்றவருமான "பனம்பாரனார்" கூறிய சிறப்புப் பாயிரத்தில் "வடவேங்கடந் தென்குமரி" என்று எல்லை கூறினார்.

வரலாறு

தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரங் கூறிய பரம்பாரனார், திருவேங்கடத்துக்கு வடக்கிலும், குமரியாற்றுக்குத் தெற்கிலும், வேறு மொழிகள் வழங்கும் நிலமிருந்ததுபற்றி வடவேங்கடந் தென்குமரி என வடக்கெல்லையும், தெற்கெல்லையுங்கூறினார். கிழக்கிலும், மேற்கிலும் கடல்களே எல்லையாயிருத்தலின் எல்லை கூறினாரில்லை கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லையாமென்பதனை,

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியோடு பொருது கிடந்த

---

* பனம்பாரம் என்னும் ஊரிலே பிறந்து வசித்த காரணத்தால் இவர்க்கு இப்பெயர் வழங்கியது.

நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே"

என்று "சிறுகாக்கை பாடினியார்" கூறியதனாலறிக.

சிறு காக்கை பாடினியார் நூல் செய்த காலத்துக் குமரி யாற்றோடு பனைநாடுகள் கடலின் வாய்ப்பட்டமையின் அவர் தெற்கிலுங் கடலையே எல்லையாகக் கூறினர்.

இங்கு கூறியவற்றால் தொல்காப்பியஞ் செய்யப்பட்ட காலத்தில் நெல்லூர் ஜில்லாவின் தென்கோடியும், சித்தூர், வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், திரிசிராப் பள்ளி, மலையாளம், நீலகிரி என்னும் ஜில்லாக்களும், தென் கன்னடம் ஜில்லாவின் முக்காற்பங்கும், மைசூர் இராச்சியத்தின் தென்பாதியும், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை என்னும் இராச்சியங்களும் கடலின் வாய்ப்பட்ட குமரியாற்றோடு கூடிய பனைநாடுகளும் தமிழ் வழங்கு நிலங்களாகவே இருந்தன என்பதும், அக்காலத்து இந்நிலங்களில் வேறு மொழிகள் வழங்கியதில்லை. என்பதும் நன்கு விளங்குகின்றன. மலையாள ஜில்லா முதலிய இடங்களில் வழங்கும் மலையாளமொழி மிகவும் சமீபகாலத்தில் உண்டானதென்பது யாவரும் ஒப்புக் கொண்டதொருசெய்தியே. இப்பொழுது தமிழ் வழங்கும் ஜில்லாக்களினுள்ள தமிழ்மக்களின் தொகை இரண்டுகோடியாகும். முற்கூறிய இடங்களிலெல்லாம் தமிழ்மக்களே இருந்தனர்; பிறகு அவர்களிற் சிலர் மலையாள முதலிய மொழிகளுக் குரியவர்களாய் மாறினார்கள் என்பது நன்கு விளங்குதலின் அக்காலத்துத் தமிழர்களின் தொகை நான்கு கோடிக்குக் குறையாமல் இருந்திருக்கும்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் மொழி தொல்காப்பியஞ் செய்யப்பட்ட காலத்து வடக்கில் திருவேங்கடமும், தெற்கில் குமரியாறும், கிழக்கிலும், மேற்கிலும் கடலுமாகிய எல்லைக் குட்பட்டிருந்த தென்பது தெளிவாம்.

சி. கு. நாராயணசாமி முதலியார்
கோயமுத்தூர்.

வைகறைத் துயிலெழு

நீ அதிகாலையில் நித்திரையிலிருந் தெழுந்திரென்பதிதன் பொருள். இது ஔவைப்பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய அநேக நீதிவாக்கியங்களு ளொன்றாகும்.

காலை நீராடி பரிசுத்தமாகவும் நிம்மதியாயும் திரிகரணசுத்தியோடும் கடவுளைத் துதிப்பதற்கு ஏற்றகாலம் வைகறையே. காலையில் திரிகரண சுத்தியோடு கடவுளைத் துதித்தல் அன்று முழுதும் துதித்தற்குச் சரியென்று கூறுநிற்பர் பெரியோர். தேகப்பயிற்சி செய்வதற்கு ஏற்றகாலமும் சிறந்தவேளையும் அதிகாலையே. நாம் ஒரு நாளைக்கு அதிகாலையிலெழுந்திருந்தோமானால் சோம்பல் அன்று முழுதும் தலையெடுப்பதே இல்லை. சுறுசுறுப்போடு வேலைசெய்கிறோம். எப்பொழுதும் களிப்புடனே இருக்கிறோம். யாதேனுமோர் இடையூறு நமக்குச்சம்பவித்தபோதும் அது துன்பமாகவே தோன்றக் காண்கிலம். தேக வளர்ச்சிக்குக் காலையிலெழுந்திருத்தலும் காலையில்தேகப்பயிற்சி செய்தலும் காலையிற்குளித்தலும் ஏதுக்களாகும். காலையிலெழுந்து உலாவிவருதல் கால்களுக்கு பலமென்பர் பெரியோர். அதிகாலையில் எவ்வித அருமையான வேலைகளையும் தெளிந்த அறிவோடு செய்யலாம்.

ஒரு தந்தை தன்தனயனுக்குத் தானிறக்குந் தருணத்தில் சில நற்புத்திகளைப் புகட்டினார். அவற்றுள் முதலாவதாக. நீ உன்வேலைக்குப் பந்தலமைத்துக் கொண்டே செல்(பந்தலமைத்தல் சூரியனுதிக்குமுன் செல்லல்.) என்று நவின்றார்.

நாம் அதிகாலையிலெழுந்திருத்தல் இனி நாம் செய்யப்புகும் ஒவ்வொரு வேலைக்கும் காலவரை குறித்து அதன்படி நடக்க ஏதுவாகும்.

சிலர் அதிகாலையிலெழுந்திருத்தலை நீக்கி, கதிரவனொளி தங்கள் தேகங்களில் பிரகாசிக்கவும் அவன் கிரணங்கள் தங்களுடலில் சுரீர் சுரீரென்று பலகணிவழியாயும் அல்லது வேறு வழியாயும் சுடசுட சுமார் ஏழரை மணிக்கு எழுந்திருக்கிறார்கள். இவர்கள் "அனந்தலாடேல்" என்ற மெய்ஞ்ஞானச் செல்வராகிய ஔவைப் பிராட்டியாரின் திருவமுதவாக்கைச் சற்றேனுஞ் சிந்தித்திலர் போலும்! "உறங்குவதிராவொழியப் பகலுறக்கஞ்செய்யோம" என்றமேதையர் திருவாக்கையேனுஞ் சற்றுஞ் சிந்திப்பவர்களாய்க் காணோம்.

அதிநேரங்கழித்து எழுந்திருக்குஞ் சிறுவர்களை நோக்கி "சிறுவர்காள்! நீங்களேன் இந்நேரம் வரைக்கும் மூத்தவள் சகவாசத்திலிருந்து வருகிறீரெனக் கேட்டதற்குப் பதிலாக அப்பிள்ளைகள் சிறுவர்களாகிய நாங்கள் இதற்குள்ளாகிலும் நித்திரையை விட்டு எழுந்து வருகிறோம்; எங்கள் தாய் தந்தைய

ரின்னமும் உறங்குகிறார்களே அதற்கென் செய்வது? அவர்களல்லவோ நமக்குமுன்னெழுந்து நம்மைச்சரசுவதிமுகத்தில்விழிக்கச் செய்தல்வேண்டும்" என்பதாக மொழிகிறார்கள். "தாயைப்போல்சேய் நூலைப்போல்சேலை" என்பதொக்க பெற்றோரே பிள்ளைகள் குணகுணங்களுக்கு உரிமையாளரா கின்றனர்.

மனையில் பெண்மணிகள் தங்கள் மனைத்தொழில்களைச்செய்வதற்கும், வீட்டைச்சுத்திசெய்து, சாணந்தெளித்து மெழுகிக்கோல மிடுதல் முதலிய வேலைகளைச் செய்வதற்கும், தங்கள் கணவர்கள் விழித்தெழுமுன் அவர்கட்குவேண்டிய வற்றைச்சேகரித்தமைத் தன்னோரை வணங்குதற்கு மேற்றகாலம்வைகறையே. திருவள்ளுவர் தன்மனைவி வாசுகியம்மாள் இறந்தபோது,

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொற்றவறு தபாவாய்—அடிவருடி
பின்றூங்கி முன்னெழுந்தபேதையேபோதியோ
என்றூங்கு மென்கணிரா.

என்று பாடிவருந்தினர்.

சிறியோர்கள்தங்கள்பாடங்களை மனப்பாடஞ்செய்வதற்கும் பெரியோர்களிடம் பாடங்கேட்பதற்கும் செய்யுட்களை தெளிந்த அறிவோடு வாசித்தற்கும் எற்றகாலமும் வைகறையே யாகும்.

அதிகாலையிற் சேவல்கள் தங்கள் மதுரமான தொண்டைகளைத் திறந்து "கொக்கோரிக்கோ! கொக்கோரிக்கோ!" வென்று கூவும்போது நமது செவிகளிற் பஞ்சடைத்திருந்தாலும் செவிடாயிருந்தாலும் அம்மதுரமான தொனி நமது செவிகளைத் துளைத்து அவைகளினுட்புகுந்து "பொழுது விடிகிறது! பகலவன் தேர்செலுத்த முந்துகிறான். அவன் தேர் ஓடத்தொடங்குமுன் நீங்களுங்கள் தொழில்களை அவனுக்குமுன் ஆரம்பியுங்கள்! எழுந்திருங்கள்; எழுந்திருங்க" ளென்று நாம் நல்வழிசேர்தற்பொருட்டும் மூதேவிக்கு நம்மிடம் கொஞ்சமும் வேலை தராமலிருத்தற்கும் மிகுந்த சிரமத்தோடு அநேகந் தடவைகளிற் சலியாமற் கூவுகின்றன.

காகங்களுக்குரிய,

"காலையிலெழுதன் மற்றோர் காணுமே இன்புறுதல்
மாலைக்குளித்து மனைக்கேகல்—சாலவே
உற்றாரோடுண்ணல் உறவினரைப் பேணல்
கற்றாயே காக்காய் கனிந்து." என்னும் ஐங்குணங்களுள் காலையிலெழுதலையே முதலாவதாக மொழிந்திருக்கின்றது.

நாம் உறங்குவது நமது உடல் வேலையின் மிகுதியால் அலண்டு திரிந்து கஷ்டப்பட்டிருக்கிறதை தணிப்பதற்கே. இனி நாம் காலத்தை வீணாக உறக்கத்தில் கழிக்காமல் எவ்விதத்திலும் எந்தநேரத்திலும் பிரயோஜனப்படும்படி கழித்தின்பமெய்துவோமாக. M. மாணிக்க நாயகர், புதுவை.

கல்வி

கனவான்களே!

அலை கடல் சூழ்ந்த இவ்வனியின்கண், ஆன்றோர்களாலும், அருந் தமிழ் நூற்களாலும், இக்கலாசிந்தாமணி போன்ற பல சஞ்சிகைகளாலும் இக்கல்வி என்னும் விஷயத்தைப்பற்றி, தாங்கள் பல தடவை கேட்டும் படித்தும் உணர்ந்திருப்பீர்களானாலும், சிற்றறிவுடைய சிறியேனும் அதே விஷயத்தைக் குறித்து கூறத்துணிந்ததின் நோக்கமென்னவெனின், அயல் நாடுகளனைத்தும், கல்வியைக் கட்டாயமாகவும், இலவசமாகவும், இன்னும் எவ்வெவ்விதமாய்ப் பரவக்கூடுமோ, அவ்வவ்விதமாகப், பெண்கள், ஏழைகள் முதல், யாவரும் கற்று முன்னுக்கு வந்திருப்பது போன்று, நம்முடைய தேசமும் முன்னுக்கு வரும்படி, கல்வியறிவில்லார்க்கும் கல்வியின் பெருமையை எடுத்துக் கூறி அவர்களை முன்னுக்கு கொண்டு வரும் பொருட்டு, மாந்தர்க்கு முக்குணவயத்தால் மனம் மாறுந் தன்மையுடையதாதலால், ஓர் விஷயத்தை அறிந்தோரும், அதை அடிக்கடி பாராட்ட வேண்டுமென்னும், ஆன்றோர் கொள்கையை யனுசரித்து, கற்றோர்களாகிய தங்களுக்கு இவ்விஷயத்தை ஞாபக மூட்டவும், கல்வியைக் கற்க பிரவர்த்தித்திருப்பவர்க்கு அதன் பெருமை விளங்கவும், அடியேன் ஒருவாறு இவ்விஷயத்தை எழுதத்துணிந்தேன். இதிற் பிழையுளதாயின் மன்னிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

1. கல்வி என்றால் என்ன?

கல்வி என்றால், ஒருவகைத் தொழிற் பெயர். இதற்கே பற்பல காரணங்களினால் "உறுதியுஞ் சால்பு மோதிய மறிவுங் கலையுங் கேள்வியுங் கல்வியாகும்" என்னும் சேந்தன் திவாகர சூத்திரப்படி பல நாமங்களுண்டு: அக்காரணமாவது, மக்கட்கு உறுதியைத் தருவதினால் உறுதி என்றும், தகுதியுடையவராக்குதலினால் சால்பு என்றும், பல தடவை ஓதுவதினால் உண்டாவதாயிருப்பதினால் ஓதி என்றும், அறிவை பிரகாசிக்கச் செய்வதினால் அறிவு என்றும், பற்பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால் கலை என்றும் கூறப்பட்டிருக்கிறது. கல்வி என்ற பதத்திற்கு கல், பகுதி; வி, தொழிற் பெயர் விகுதி. கல் என்ற பதத்திற்கு தோண்டு, என்பது மொரு பொருள். எதைத் தோண்டுதலென்றால், அறிவை இதுபற்றியே நாயனாரும்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." அதாவது மணற் கிணறானது தோண்டுந்தோறும் ஊற்று சுரப்பது போல, மக்கள் கல்வியைக் கற்குந்தோறும், அறிவு விர்த்தியாகுமென மொழிந்துள்ளார். மேலும், நாம் உலக வஸ்துக்களை பிரத்தியக்ஷமாய் அறிந்து கொள்வதற்கு எங்ஙனம் பஞ்சேந்திரியங்களோடு கூடின மனம், உபயோகப்படுகின்றதோ, அப்

படியே பிரத்தியக்ஷமா யறியக்கூடாதவைகளை அனுமான, உவமான முதலிய பிரமாணங்களால் அறிந்து கொள்வதற்கு மிகவும் கூர்மையான அறிவோடு கூடிய மனமானது, அவசியமாம். அதற்கு 'எல்லாருஞானத் தெளிஞரே" என்றபடி ஒவ்வொரு ஜீவனும் அறிவுண்டயவனேயானாலும், அவ்வறிவு மங்கலாயும், மறைபட்டுமிருக்கும். கல்வியால் அறிவு பிரகாசிக்கும். இதைப்பற்றியே,

"கண்ணகத்து அஞ்சனம் போற் கல்வி." அதாவது பூமியில் மறைபட்டிருக்கும் பொருளை அறிவதற்கு அஞ்சனமாகி யமை எப்படி உபயோகப்படுகிறதோ, அப்படியே, மறைபட்டிருக்கும் அறிவை விளக்குவதற்கு கல்வி உபயோகமாயிருக்கிறது. எனவும் சுவாமி விவேகாநந்தர் கல்விக்கு இலக்ஷணம் சொல்ல நேர்ந்த காலத்து அதாவது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கும் அறிவை விகாசிக்கச் செய்வது கல்வி எனவும் திருவாய் மலர்ந்தனர். ஆகவே மனிதன் அறிவை மென்மேலும் பிரகாசிக்கச் செய்வதற்கு ஆதாரமான தொழிலினுடைய பெயராயிருப்பது கல்வி.

2. கல்வி எத்தனை விதம்?

கல்வியானது உலகக்கல்வி என்றும், அறிவுக் கல்வி என்றும் இரு விதமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு திருஷ்டாந்தம். நாலடியாரில்,

"அலகுசால் கற்பின் அறிவு நூல்கல்லா துலகநூலோதுவதெல்லாம்" என்பதனால் செவ்விதின் விளங்குகிறது. உலகக் கல்வியாவது இம்மைக்கே பெரும்பாலு முபயோகப்படக்கூடிய, சிற்பம், விவசாயம், வர்த்தகம், உத்தியோக முதலியவைகளுக்கு ஏற்றதாய கல்வியாம். அறிவுக்கல்வியோ, இம்மைக்கேயன்றி மறுமைக்கு முபயோகப்படக்கூடிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்களை தருதற்குச் சாதகமானவைகளை உணர்த்தும், தர்ம சாஸ்திரம், தத்துவ சாஸ்திர முதலியவைகளாம். இந்நூற்களை யாவுங் கற்பதற்கு ஆதாரமான சாமக்கிரியை (கருவி)யாயுள்ளது எண்ணும், எழுத்துமாம். எண்ணாவது, பல வஸ்துக்களின் சங்கியை கணக்கிடுவதற்கு உபயோகமானது. இதைப்பற்றி கூறும் நூலுக்கு கணித சாஸ்திரமென்று பெயர். எழுத்தாவது,

"மொழி முதற் காரணமாமணுத்திர ளொலி எழுத்தது" என்னும் நன்னூல் சூத்திரப்படி நாம் உச்சரிக்கும் வார்த்தைகளுக்கு முதற் காரணமாயுள்ள அணுக்களின் கூட்டமாகிய ஒலியே எழுத்தாகும், இதைப்பற்றி கூறும் நூல் இலக்கண சாஸ்திரம். இதைக்கற்றால் தான் சொற்களின் எண்ணங்களை சரிவரத் தெரிந்துகொள்ள முடியும். இவ்விரண்டும் இத்தகை சிறப்பையுடைத்தாயிருப்பதனால் தான்,

"எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றும்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப வவ்விரண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு." என்றும்,

இரு கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டிருப்பதோடு அமையாது,

"மூகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்," என்று கல்லாதார் முகக் கண்களை புண்ணுகளுக்குச் சமானமாகவும், பெரியார் பணித்துள்ளார்கள். இதனால் கல்வியானது உலகக் கல்வி, அறிவுக் கல்வி என இருவிதமெனவும், அதற்கு ஆதாரமானது, எண் கல்வி, எழுத்துக்கல்வி என இருவிதமென்பதுவும் பெறப்பட்டது.

3. கல்வியின் பிரயோஜனம்

கல்வியின் பரமப்பிரயோஜனம் அறிவை விர்த்தி செய்தலாம். அதனால் 1-நன்மை தீமைகளைப் பகுத்தறியுந் தன்மை. 2-நன்னெறியிற் பொருளை ஈட்டி பாதுகாத்து ஈட்டியவண்ணம் செலவு செய்யும் வகை. 3-யாவராலும் மேன்மையுடையவனென்று கொண்டாடப்படுந் தன்மை. 4-அன்பு, அடக்கம், பொறை, இன்சொல், ஜீவகாருண்யம், தெய்வ வழிபாடு, பெரியாரைப் பேணல், முதலிய ஒழுக்கங்கள். 5. ஜெக, ஜீவ, பரங்களின் உண்மை. 6-மற்றும் பல நன்மை என்று சொல்லப்படுபவை யனைத்தும் உண்டாவதாம். ஆனதுபற்றியே,

"அறம் பொருளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை
சிற்றுயிருக்குற்ற துணை.' எனவும்,

"கல்வியே யாவர்க்கு மொளிகொண்ட வடிவமாங் கல்வியே புதைய [லாகுங்
கல்வியே பரதேச கமனவின மாருமக் கல்வியே துணைய தாகுங்
கல்வியே திசைகொண்ட கன கீர்த்தியைத்தருங் கல்வியே [பெருமையாக்குங்
கல்வியே வேண்டுநற் போகங்களைத்தருங் கல்வியே யின்பமாக்குங்
கல்வியே நிலை கொண்ட கற்பகத் தருவதாங் கல்வியே செல்வமாகுங்
கல்வியே யரசரால் பூஜை செய்விக்கும் கல்வியே கடவுளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற் கருதிடினுமில்லை
யில்லை, கல்லா னகத்தொன்று மில்லா னடக்கு மிருகாற் பசுவதென்பர் மாதோ" என்று கல்வியின் பயனையும், கல்லாதவர் இருகால் மாட்டிற்கு சமமென்றும் ஆன்றோர் அருளியுள்ளார்கள். ஆனால்,

"கற்கக்கசடற கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்றபடி,

தகுதியான நூல்களை குற்றமறக்கற்று கற்றவாறு ஒழுகினால்தான், மேற்சொல்லிய அளவிறந்த பிரயோஜனமு முண்டாகுமே யொழிய இல்லாவிடில் கற்காதவர்களாகவே துன்பமடைய நேரிடும். ஆனால்,

"கண்டதைப் படிக்கப் பண்டிதனாவான்,"

என்ற பழமொழியில், தக்க நூல்கள் என்று கூறவில்லையே என்று சங்கிக்கின், கண்டதை என்பது அறிஞர் பிரமாணமாகக் கண்ட நூல் என்றே பொருள். இதையறியாமல் சிலர், ஆசையைப் பெருக்கிய வலமுறச் செய்வதற்கேதுவாகிய பல நூல்களைப்படித்து, குருடன் கூபத்தில் விழுந்து, ஏறும் வகை தெரியாது, எக்கமுறுவது போன்று, ஏக்க முறுகின்றனர். சிலர், சில கற்றவளவிலே நிரம்பிய கல்வி

யறிவு சித்தித்து விட்டதாக, அகங்கரிக்கின்றனர். இவைகளெல்லாம் தகுதியானவைகளல்ல. நிரம்பிய கல்வி யறிவின் பயன் சாந்தமுடைமையும், கடவுள் வழிபாடுமேயாம். இதனாலேயே,

"புகழ்க் குரியன் கற்றோனெனினும் புவியில்
இகழ்க்குரியன் சாந்தமிலனேல்." எனவும்

"ஓதுந் திறத்தினுயர்ந்தோர்கள் தாழ்குவரெப்
போது முயர் வெய்தற் பொருட்டு," எனவும்

"கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாடொழாஅரெனின் எனவும்

மூதோர் மொழிந்துள்ளார்கள். ஆதலால் முடிவாகக் கூறுமிடத்து, கல்வியின் பயன் அறிவு விர்த்தியும், அறிவின் பயன் ஒழுக்கமும் கடவுள் வழிபாடுமேயாம். இதுவே மானிடப்பிறவியின் முக்கிய பயனுமாம். இங்ஙனமாக, ஒழுகி, கல்வியின் பிரயோஜனத்தை அடையாதவர்,

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப்
பேதையிற் பேதையாரில்."

என்றபடி பேதையராவார்.

4. கல்வி நமக்கவசியமா?

கல்வியாலுண்டாம் மேற்சொல்லிய அளவிறந்த பிரயோஜனத்தையும், மக்களாய்ப் பிறந்த நாமடையாது பின் யார் தான் அடைதற்குரியவராவர் ஒருவருமில்லை.

ஆதலால், சொல்லாமலே அது நமக்கு அவசியமென்பது பெறப்படுகிறது.

5. கல்வியைக் கற்கும் விதம்

கல்வியை இளமைப் பருவ முதற்கொண்டே கற்கத் தொடங்க வேண்டும். அப்பொழுது தான் அகப்புறக்கருவிகள் தன் வசப்பட்டும், மனம் நிர்மலமாகியும், சம்சார பந்த முதலிய துன்பங்களின்றியதாயுமிருக்கும். அக்காலத்து கற்கப்பட்ட கல்வியானது, அழுக்கில்லாத வெண்மையான வஸ்திரத்தில், ஏற்றப்பட்ட சாயம்போல செவ்வனே மனத்திற் பற்றும். இதுபற்றியே நம் தேசத்தில் ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்கிற வழக்கமும், "இளமையிற்கல்" என்ற நீதி வாக்கியமும் பிறந்திருக்கிறது. அங்ஙனம் கற்கின்ற காலத்து உபாத்தியாயரிடத்து பக்தியுடையவராய் அவர் குறிப்பறிந்து ஒழுகி, போதிக்கும் விஷயங்களை சிரத்தையுடனே ஐயம், திரிபு, அறியாமை என்கிற முக்குற்றங்களும் நீக்கி சிரவணித்து, பின் மனனஞ் செய்து, படித்த வண்ணம் மனம் படியும்படி, அனுபவித்துப் பார்ப்பதுவுமே படிப்பாகும். படிப்பு என்றாலே மனம் படித்தவாறு படியப் பெறுவதென்றே பொருள். இக்கருத்துப்பற்றியே ஔவையாரும்,

"வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்றார். (வரும்)

க. குப்புசாமி முதலியார்
சமரஸ சன்மார்க்க சங்கம், புதுப்பாளையம்.

நாம் ஒழுகவேண்டிய நெறிகள்

(153-ம் பக்கத் தொடர்ச்சி)

"எப்பொரு ளெத்தன்மைத்தாயினு மப்பொருண்
மெய்ப் பொருள் காண்பதறிவு" எனத் திருவள்ளுவரும் கூறியுள்ளார். ஆகையின், நீதி புணர்ச்சிக்கும் சன்மார்க்கத்திற்கும் அறிவு இன்றியமையாப் பொருள் என்பது நன்கு விளங்குகின்றது.

இனி, அறிவுடைமை, அறிவின்மை என்பனவற்றை யாராயுங் கால், பல நூல்களையும் பயின்று, அடங்கியிருந்து,

"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள்) என்றபடி தக்க தருணத்தில் சமயோசிதமாய் நீதி நெறி தவராமல், தம் அறிவை உபயோகிப்பவர்களே நல்லறிவுடையாரென்றும்,

"கல்லாது நீண்ட வொருவனுலகத்து
நல்லறிவாள ரிடைப்புக்கு மெல்ல
விருப்பினு நாயிருந்தற்றேயிரா அ
துரைப்பினு நாய்குரைத்தற்று" (நாலடியார்) என்ற ஆன்றோர் அரிய மொழிப்படி அறிவிலாதான் அறிவுடையாரிடத்து நாயைப் போல்வான் என்றும் இருத்தலானும், பகவானை யடைவதும் அறிவேயாகையானும், அறிவே சர்வாதிகாரத்தையும் பெற்றது என உறுதியாய்ச் சொல்லலாம். இத்தகைய அறிவைப் பெற்றிருந்தும் அதைச் சரிவர உபயோகியாதார் பல கற்றும் கல்லாதாரேயாவர். ஆகையால், இவ்வறிவை எக்காலத்தும், எவ்விடத்தும், எச்சந்தர்ப்பத்தும் தவறவிடாமல் பாதுகாத்து வருவதால் ஒருவன், தற்காலத்தில் அறிவின் விருத்தியால் விளங்கும் புகை வண்டி புகைக் கப்பல் ஆகாயக் கப்பல் முதலிய பலவித சாதனங்கள் பலருக்குப் பயன் படுதல் போல, தனக்கன்றிப் பிறருக்கும் பேருதவி செய்து இம்மை மறுமையிலும் பேரானந்த வாழ்வு பெற்றுய்வன்.

தானம். தானமும் ஈகையும் கொடை என்னும் பொருள் கொடுப்பினும் இரண்டும் சிறிது வேறுபாடுடையனவாயிருக்கின்றன. ஈகையின் தன்மையை ஒருவாறு உணர்ந்த நாம் தானத்தின் தன்மையையும் தெரிந்து கொள்ள வேண்டியிருத்தலானும், அதுவும் ஈகை போன்றே வீடெய்தும் மார்க்கத்திலொன்றாய் இருப்பதானும் அதைப்பற்றியும் சிறிது கூறுவாம்.

வறியாருக்கு வழங்குதலே ஈகையாக, குறித்தவர்களுக்குக் கொடுத்தலே தானமாகும். ஈகையிலும் வறியார்களையே குறித்துச் சொல்வதால் தானத்தைக் கூறுமிடத்தும் 'அவர்களையே

யெடுத்துக் கொள்வதிற்றடையில்லையாயினும், வறியாருக்கன்றிப் பிறருக்கும் ஒருவன் குறிப்பிட்ட பொருளைக் கொடுத்தலால் தானம் ஈகையினின்றும் சிறிது விலகியதென்றே சொல்லலாம். தரித்திரருக்குக் கொடுத்தலே கொடை என்பதும் மற்றையோருக்கு ஈவதாற் பயனென்றுமில்லை யென்பதும் ஈகையின் தன்மையாயிருத்தலானும், ஆனால், தானமோ ஏனையோருக்குங் கொடுக்கலாம் என்றிருப்பதானும், தானத்தால் உண்டாம் உபயோகம் என்னை? இரண்டும் முரண்கொண்டன்றே விருக்கின்றன; என்று எண்ணும்போது, தானத்தை ஏற்றுக்கொண்டார் இம்மையில் பதிலளிக்கவல்லாதவர்களாகவே யிருக்கின்றாராகையின் அதைத்தந்தார் மறுமைப் பயன் பெறுவது திண்ணமாமென்றும், ஆகையால் தானம் தவிர்க்கற்பாலதன்றென்றும் அறிவாளர் கட்டுறையிட்டிருக்கின்றனர். இது எவ்விதமெனில், கன்னிகாதானம், அன்னதானம், சத்திரதானம், பூங்காவன தானம், குளதானம் முதலியனவாகத் தானங்கள் பலவகைப்பட்டு அவற்றைப் பெரியாரும், சிறியாரும், வன்மையோரும், வன்மையின்மையோரும் மற்றையோரும் ஒருங்கே யனுபவித்து, யாவரும் ஏகோபித்து அவைகளைத் திருப்பித்தர முயற்சி செய்வாராயினும் அநேகமாய் அது நிறைவேறாதாகையால், தானஞ் செய்கிறவன்,

"கைமாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோவுலகு" எனத் தமிழ்மறையாளர் மொழிந்த வண்ணம் பரோபகாரக் கிருத்தியனாய் இருப்பதால் இம்மையிற் புகழுங் கீர்த்தியுமடைவதோடு மறுமையிலும் நற்பேறு பெறுகின்றான்.

தானஞ் செய்பவர்களிலும், ஈகையிடுவாரைப் போன்று, வேண்டுமென்றே தானங் கொடுப்பவர்; அவர்களடையுங் கீர்த்தியைத் தாமுமடைய வேண்டுமென்று எண்ணி அப்படிச் செய்பவர்; வெளிக்குத் தானமாகத் தோற்றுவித்து அதனால் பல லாபங்களை யடையலாம் என எண்ணிச் செய்கின்றவர் ஆக மூன்று வகுப்பினராவர். இவர்கள் முறையே மேலார், மத்திமர், அதமர் எனப்பெயர் பெற்று இம்முக்குணத்திற்குத் தக்க மாதிரி மரியாதை யெய்துவாராகையின், அதமரென நாமங் கொண்டார் தருமசத்திர மென நாமஞ்சாற்றி அதைக்குடிக்கூலிக்கு விடும் துர்ப்பழக்கத்தையும், நந்தவனம் நாட்டி புட்பங்களை விற்றுலாப மடைவதையும், இன்னும் இவைபோன்றதானம் எனப்பெயர் கொள்ளாத் தானங்களையெல்லாம் தள்ளிவிடுவதால், இம்மையிலின்றி மறுமையினும் கிடைக்கப்பெறும் அபராதங்களி னின்று நீக்கப்படுவார்கள். (வரும்)

K. R. கணபதிபிள்ளை, குணியமுத்தூர்.

கடையெழுவள்ளல் வரலாறு

(158-வது பக்கத்தொடர்ச்சி)

இனிவள்ளல்கள் எனக்கூறப்படுவோர்களை முதலெழுவள்ளல்கள், இடையெழுவள்ளல்கள், கடையெழுவள்ளல்கள் என்று மூன்று வகையினராகப் பிரித்து வழங்குவர். இவர்களில்,

முதலேழுவள்ளல்கள்:—

செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன் என்பவர்கள்.

இடையெழுவள்ளல்கள்:—

அக்குரன், மான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன் என்பவர்கள்.

கடையெழுவள்ளல்கள்:—

பாரி, ஆய், காரி, நள்ளி, மலயமான், பேகன், ஓரி என்பவர்கள்.

இவர்களில் இறுதியிற்கூறிய கடையெழு வள்ளல்களின், அருள், அன்பு, ஈகை முதலிய உத்தமச் செயல்களை புலவர்கள், புகழ்ந்து பாடியவாற்றால் நன்குணரப்படும். அதனைக்கீழ்வரும் அவ்வவ்வள்ளல்களின் தலைப்பிற்காண்க.

கொடைநலமும், குணவுமுதுஞ்சிறந்த எழுவர் வள்ளல்களுள் எவரை முன்னர்கூறுவது, எவரைப்பின்னர் கூறுவது என்று ஆசங்கை கொண்டால், ஒவ்வொருவரும் நிகரற்ற கொடை நலத்தால்சிறந்தே விளங்குவதால் இன்னவரைத்தான் முதல் வைத்துக் கூறவேண்டு மென்ற முறை தெரியக்கூடவில்லை. ஆனால்; பத்துப்பாட்டில் மூன்றும் பாட்டாகிய "சிறுபாணாற்றுப்படை"யில், இவ்வள்ளல்களைப்பற்றிக் கூறும் அடிகளில், இடைக்கழி நாட்டு நல்லூர் "நத்தனர்" எனும்புலவர் சுட்டிக்காட்டிய முறையைப்பின்பற்றி அதன்படி எழுவர் வள்ளல்களையும், அவரவர் செய்த அருஞ்செயல் முதலிய கொடை விசேஷங்களைப் புறநாநூறு முதலிய நூற்களின் ஆதாரங்கொண்டு ஒருவாறு தொகுத்துக் கூறுகின்றோம்.

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கடனுடன் பேகனும்—(1) சுரும்புண
நறுவீயுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய

பிறங்கு வெள்ளருவி வீழுஞ்சாரற்
பறம்பிற் கோமான் பாரியும்—(2) கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
ஈரநன்மொழியிரவலர்க் கீந்த
அழறிகழ்ந்திமைக்கும் அஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியும்—(3) நிழறிகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வர்க் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்—(4) மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவே
லரவக்கடற்றானை அதிகனும்—(5) கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரிகாரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்—(6) நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க்கீந்த
காரிக்குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை ஓரியும்—(7) எனவாங்கு
எழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச்செந்நுகம்"

என்பது சிறுபாணாற்றுப்படை. இனிவள்ளல்கள் வரலாறு கூறுமாறு:—

1 பேகன்

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன், மலை நாட்டையுடைய சிற்றரசன், இவன் ஊர் "ஆவிநன்குடி" என்ப. சங்க நூல்களில் "பொதினி" என்று வழங்கப்பட்டு இக்காலத்து அவ்வழக்கொழிந்து 'பழநி' என்று சிதைந்து பயிலப்படுகிறது. இதுமலையும், ஊரும் ஒரே பெயர் வாய்ந்து கோயமுத்தூர் ஜில்லாவை யொட்டியும், மதுரைஜில்லாவை அடுத்தும்விளங்குகிறது. இப்பழனிமலையில் குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகபிரான் கோயில்கொண்டு நிகழ்கின்றனர். (வரும்)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

சோதிட கலாநிதி

(165-வது பக்கத்தொடர்ச்சி)

ஜாதக ஸ்கந்தம் ஜாதகம், தாசகம் என்றுமிரண்டு பிரிவினையுடையதாம். ஜாதகத்தில் ஜனன பத்திராதி பாவதி சாந்தர்தசா பலன்களும், தாசகத்தில் வருஷமாசாதி பலன்களும் இத்த சாலாதி சோடச யோகபலன்களும், சகம ஸ்புடங்களும் கூறப்படுகின்றன. இஃது பாராசரவோரை, யவன தாசகம், நீலகண்ட தாசகம் என்னுமிவைபோன்ற நூற்களாலினிது விளங்குகின்றன.

சம்மிதா ஸ்கந்தம் முகூர்த்தம், வாஸ்து, வருஷபணி, ஆருடம் என்னும் நான்கு பிரிவினையுடையதாம். முகூர்த்தத்தில் சிரௌத ஸ்மார்த்த நித்திய நைமித்திக சத்கருமானுஷ்டான யோக்யதா பாதக சத்கால நிர்ணயங்களும், வாஸ்துவில் தேவாலயம் வீடு குளம் கூபமுதலிய விஷயங்களும், வருஷபணியில் மழை சம்பந்தமான விஷயங்களும், ஆருடத்தில் பிரஸ்னே சரம் பஞ்சபக்ஷி முதலிய விஷயங்களும் கூறப்படுகின்றன. இஃது தெய்வக்ஞவிலாசம், சனத்குமாரவாஸ்து, வருஷபணிச்சக்ரம், சினேந்திரமாலே, சரநூல் என்னுமிவை போன்ற நூற்களாலினிது விளங்குகின்றன. ஆதலால்,

சத்கால ஆயுர்த்தாய சுபாசுப பலவிக்ஞான ஏதுபூதமாய் விளங்கும் இச்சோதிட சாஸ்திரம் தெய்வப் புரோக்தம், இருஷிப்புரோக்தம், ஆசாரியப் புரோக்தம் எனவடமொழியில் கூறப்படும் முதல் வழி சார்பு நூற்களான பிரம்ம, சூரிய, ஆரிய, வசிஷ்ட, சோம, பாஸ்கராசார்ய, ஸ்ரீபதி, தெய்வக்ஞவிலாச, சாராவளி, பிருகஜ்ஜாதக, ஜைமினி, கிருஷ்ணமிசிர, பராசர, நீலகண்டதாசக, சமரசிம்ம, கேசவீஜாதக, பிருகுசம்மிதை யோகாவலிகண்டி, சம்பு ஓராபிரகாசிகை முதலான நூற்களை ஆராய்ந்து ஆரியம் பயிற்சியில்லாத நந்தமிழ் மக்கட்கினிது பயன்படுமாறு இயற்று மிந்நூற்கு சோதிட கலாநிதி என்னும் பெயர் சூட்டினர்.

கசியப சம்மிதையில்

சூரியஃ பிதாமஹோ வ்யாஸோ, வஸிஷ்டோத்ரி பராசரஃ
கஸ்யபோ நாரதோ கர்கோ, மரீசிர் மநுரங் கிராஃ
லோமஸஃ பௌலஸஸ்சைவ, ச்யவநோய வநோமருஃ
ஸௌநகோஷ்டாதஸஸ்சைதே, ஜ்யௌதிஸ்ஸாஸ்த்ரப்ரவர்தகாஃ

என்று கூறப்பட்டுள்ளபடி சோதிட சாஸ்திர பிரவர்தகர் நாமங்களைக் கண்டுய்க.

இந்நூலின் அநுபந்த சதுஷ்டய நிரூபணமாவன, அதாவது விஷயம், பிரயோசனம், சம்பந்தம், அதிகாரி என அநுபந்த சதுஷ்டயம் நான்கு வகைத்தாம்.

தைவக்ஞ விலாசம்

''ஜ்ஞாதார்தம்ஜ்ஞாதசம்பந்தம் ஸ்ரோதும்ஸ்ரோதாப்ரவர்த்தே க்ரந்தாதௌ தேனவக் தவ்யஸ் ஸம்பந்தஸ் ஸப்ரயோஜநம்.''

என்றபடி அவற்றுள் கிரகவிராசிகளின் சொரூபமும், தசாந்தர் தசாபலமும், இலக்கினாதி துவாதச பாவபல விசாரமும், இராஜயோக கேமத்துரும யோகாதிகளுமே இந்நூலின் விஷயமாம்.

இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் முக்காலங்களினும் நிகழும் சுபாசுப பலவிஞ்ஞானமே இந்நூலின் பிரயோசனமாம்.

கிரக விராசி சொரூப தசாபல பாவபல விசார இராஜயோககேமத் துரும யோகாதிகள் முதலிய விஷயங்கள் பிரதிபாத்தியமும், சோதிடகலாநிதி என்னு மிச்சாஸ்திர மதனைப் பிரதிபாதிப்பதுமாம். ஆகவே விஷயத்திற்கும் நூற்கும் பிரதிபாத்ய பிரதிபாதக பாவம் என்னும் சம்பந்தமாம்.

பாவபலம், தசாபலம், ஆரூடபல முதலியவற்றைச் செவ்வனே அறிந்த ஜிக்ஞாசுவே அதிகாரியாம். இதுவே இச்சாஸ்திரத்தின் சதுஷ்டய அநுபந்தம் என்றுணர்க.

நூல்

வழிபடு கடவுள் வணக்கம்

நிறைமதியனைய மூவிருமுகமுநே ரருட்பொழி தருபன்னிர், மிறையறு நோக்குஞ் சுடரிலைநெடிய வேலும்வேறு ளபடைதரித்துக், குறைதவிர்த்தாட் கொள்பன்னிரு மலர்க்கைக்குகபரனடி மலர்ப்பழிச்சி, மறைவிழி யெனுஞ்சோதிட கலாநிதியில் வழுத்துவன் படைப்பினை மாதோ.

ஸ்ருட்யர்தம் ஸர்வதத்வானும் லோகஸ்யோத்பத்தி காரணம்
யோகினு முபகாராய ஸ்வேச்சயா சிந்திதஸ்ஸிவ

என்று திவ்வியாகமங் கூறுமாற்றால் சகல தத்துவங்களின் சிருஷ்டியின் பொருட்டும், சகல லோகங்களின் உற்பத்தியின்பொருட்டும், யோகிகளுடைய தியான பூசைக்குபகாரமாகும் பொருட்டும் சிவன் சுயேச்சையாக சங்கற்பஞ் செய்தார். சங்கற்பஞ் செய்து தமது சக்தியின் வழியாக சகல திருவுருவங் கொண்டருளினா. எனவும் ''ப்ரஹ்மணோ அவ்யக்தம், அவ்யக்தாமஹத், மஹதோஹங்காரஃ, அஹங்காராத் பஞ்சதந்மாத்ராணி, பஞ்சதந்மாத்ரேப்யோ பஞ்சமஹாபூதாநி, பஞ்சமஹா பூதேப்யோ அகிலம் ஜகத்'' என்று திரிசிகி பிரமணோபநிஷத்து கூறுமாற்றால் பிரம்மத்திலிருந்து அவ்வியக்தமும், அதனால் அகங்காரமும், அதனால் பஞ்ச

தன்மாத்திரைகளும், அந்த சூட்சுமங்களாகிய பஞ்சதன்மாத்திரையினால் தூலவாகாசாதி பஞ்சபூதங்களும், அவற்றினால் பிரபஞ்சமும் உதித்தது எனவும் விளங்காநிற்கும். ஆகலின் சூதசங்கிதை எக்கிய வைப காண்டம், விசேட சிருஷ்டியத்தியாயம் உ-ம் கவி,

கருத்தாவாய பரசிவன்றன் மாயையொடுவே றறக்கலப்புற்
றிருப்பா னெனினும் பூருவகற்பத்தினியை வாசனையானுங்
கருச்சாய்த் துயர்ந்தீர் செறிகால கருமவனுகுணமதாயுந்
தருக்காநின்ற மாயைக்குந் தனக்கும்பேதங் கற்பிப்பான்.

எனக் கூறியபடி ஸ்வாதிரிக்தசத்தா சூன்னியமாய கண்டமான சச்சிதானந்த அவ்வியக்தாத் விதீயாதிகளினால், இலௌகிகவிலக்ஷணத்திற்கு, நிர்குணமெனப்படும் பரப்பிரம்மம், தன்னுடனபின்னமான தனது மாயையினா லபின்னமானாலும், காலகருமானுரோதமாக பூர்வகல்ப வாசநாநிவிதனாய், தன்னிற்றான் பேதத்தைக் கற்பித்துக் கொண்டு, பிரணவமாயா பீஜவாச்சியமான * பிரகிருதி (சிற்சத்தி) புருஷாத்மக (சடசத்தி) மான, காமேசுவரி காமேசுவர சொரூபமான, ஆதிமிதுனமாக உத்பத்தப்பிரம்மமே, ○ அவ்வியக்த தத்துவ மெனப்படுகின்றது. இதுவேசதாசிவாத்மக மக (புத்தி) தத்துவமாக, அபிவியக்தமானது. "இதம் ஸர்வமஸ்ருஜதঃ" என்று தைத்திரியோப நிடதங் கூறுமாற்றால் சுத்த சத்துவனான அந்த ஈசுவரனே சத்துவ, இராசத, தமோ ரூபமாயா குணவசத்தினால் விஷ்ணு, பிரம்மா, உருத்திரர் என்னும் சத்துவாகங்கார, இராசதாகங்கார, தாமசாகங்கார மூர்த்திகளைச் சிருஷ்டித்து "தத்ஸ்ருட்வாதே நுப்ரவிஸத்" என வுபநிடதங் கூறுமாற்றால் அவற்றுள் தானே அநுப்பிரவேசமாய் திரிமூர்த்தி யாத்மகன் எனப்படுவர்.

இராசதத்தின் குணமெய்தி நான்முகனாயுல கீனும்
பரவுற்ற சாத்துவிகப் பண்பின் மாலாயளிக்கு
முறைபெற்ற தமோ குணத்தாலு ருத்திரனாய்த் துடைத்தருளு
மருவுற்றும் விச்சையினின் மருவாமன் மகேச்சுரனே.

வித்வான். வ. கு. வேலுநாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி, இராயவேலூர்.

---

* "ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ வித்யநாதி முபாவபி" பகவத்கீதை.

○ அவ்வியக்தமாவது; அசுத்த மாயையினின்றுந் தோன்றிய மூலப்பிரகிருதியான மகேச்சுர மூர்த்தியின் சத்தியாம் அது சாத்துவிகம், இராசதம், தாமசம் என்னும் முக்குணசமத்துவமாக நின்றவிடத்துப் பிரதானம் எனவும் பிரகிருதி எனவும் பெயர் பெறும். இப்பிரகிருதி மாயையும் புருடத்துவமுஞ்சேர்ந்த விடத்துச் சகமுற்பத்தியாகின்றது. ஆகவே பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் மாயையும், துணைக்காரணம் சிவசத்தியும், நிமித்தகாரணம் சிவமுமாம்.

இருமல் ரோகம்

(167-வது பக்கத்தொடர்ச்சி)

1. ப்ரவாளபற்பம்

பிரவாள் பற்பமிது பிரதாப வெற்றி
பிசகாதி யற்றிலிது பிரதானி நட்பாம்
பிரதான வத்துவிது பிரயோச னித்தால்
பிலமாகு மெய்க்கரண பிலமாகி நிற்கும்
பிரவாள முப்பத்தி பிணைநீ ரதற்குப்
பினுமூ விரட்டியிடு பிறழா தரைத்துப்
பிரமா முடிப்பகல்கள் பிரிவா யுலர்த்திப்
பின்போர் புடத்தையிடு பிறழா ததைப்பின்
பிணைபோ மலருக்கமுது பினவே யரைத்துப்
பிரியாது முற்படிசெய் பிறைபோ னிறக்கும்
பிளிருளி யொக்குமது பிடியானை யொக்கும்
பிணியான வெப்பமுதல் பினுநோய் களுக்கே
பிரசத்தி லுண்ணின்மதி பிசகப் பரக்கும்
பித்தவினை மத்தசனி பித்தவலி யறுமே
பிருங்கத்தி னமுதிலயில் பிரமையதி சாரம்
பிளவைவலி குன்மவலி பின்னநலி யறுமே
பிரமியிலை யமுதிலுணிற் பிச்செரி கழிச்சல்
பிண்டநலி சுகசந்நி பிறைக்காய்ச் சலறுமே
பிரண்டைரச மதனிலயில் பிரியாத வாத
பித்தகப சஞ்சிதக பித்தசநி யறுமே
பிப்பிலிர சத்திலுணப் பிற்றைமுறைக் காய்ச்சல்
பிரசாபதிக் கடுகன் பிஞ்சுநலி வினைபோம்
பித்திகை ரசத்திலுணப் பித்திகையெ னச்செய்
பித்தையுறு சிக்கவலி பில்லிமுத லறுமே
பிலத்துருசி நெய்யிலுணப் பிறங்குகப வனல்போம்
பிரமபத் திரியொடிளம் பிடியும்வர்ச் சிதமே.

இதற்குப் பிண்டமாகக் கொண்டுரைப்பதாகிய பொழிப்புரையெழுதின் சிலர்க்கே பயன் படுமென்றுன்னிக் கண்ணழிவுரை எழுதுகின்று மென்றறிக.

(இ-ள்.) இது பிரவாள பற்பம்=இது பவழபற்பம், இது பிசகாது இயற்றில்=இதை அடியிற் சொல்லப்படும் கிரமத்தின்படி தவறின்றிச்செய்து முடித்தால், பிரதாபவெற்றி=யாவராலும் புகழப்படும் கீர்த்தியொடுகூடிய வெற்றியை யுடையதாகும், பிரதானவத்து இது=(அடியிற் காணப்படும் நோய்களைப் போக்குதற்கு) முக்கிய பொருளாகிய இந்தப் பவழபற்பத்தை, பிரயோசனித்தால்=நோய்கள் மேல் கையாடினால், பிரதானி

நட்பு ஆம்=சேனைத் தலைவனாகிய சேஷ்மத்துக்கு சிநேக முள்
ளது ஆகும், (அன்றியும்) பிலம் ஆகும் மெய்க்கு=பல முள்
ளதாகிய சரீரம் என்னுங் கோட்டையை பாதுகாத்தற்கு, அர
ணபிலம் ஆகிநிற்கும்=பல முள்ளமதில் போலாய் காத்திருக்
கும். (இது வரைக்கும் இப்பவழ பற்பத்தின் சிறப்புச் சொல்ல
ப்பட்டது; இனி அதைச்செய் முறை சொல்லப்படும்.) பிரவா
ளம் முப்பத்தி=சுத்திசெய்த நற்பவழம் மூன்று ரூபா எடை
எடுத்து, (அதைக் கல்வத்திலிட்டு) அதற்கு=அந்தப் பவழத்
தின் எடைக்கு, பின்னும்=மேலும், பிணை நீர்=பெண் யானை
யின் நீர், மூ இரட்டியிடு=நாளொன்றுக்கு ஆறு ரூபா எடை
யாக இரண்டுநாள் அவ்வாறேசெய்து, பிறழாது அரைத்து=
தவறாமல் அரைத்து (பில்லையா யுருட்டி,) பிரமாமுடிப்பகல்கள்
பிரமதேவனுடைய தலைகளது எண்களைக் கொண்ட நான்கு
களில், பிரிவு ஆய்=(அரைப்பு இரண்டுநாட்கள் சென்றதால்,
பிரிந்த இரண்டுநாட்கள்,உலர்த்தி=வெயிலில் உலர்த்தி,பின்பு=
நன்றாய் உலர்ந்த பின்பு, அதைப்பிறழாது=அதை யாதோர்,
தவறுமின்றி, புடத்தையிடு = (ஐந்தாவது நாள் காலையில்
இயற்கையாகிய எரு அல்லது அவ்வெரு வொன்றன் எடை
கொண்ட வைக்கோல் முதலியவை போடாமற் றட்டப்பட்ட
எரு நூற்றில் ஐம்பது கீழும் ஐம்பது மேலும் வைத்து நடுவில்
அப்பில்லையை அகலிலிட்டுச் சீலைசெய் துலர்த்திவைத்துப்) புட
ம்போடு, (பிறகு ஆறாவது நாள் காலையில் நன்றாய்க்குளிர்ந்திரு
க்குமதனை எடுத்துப்பிரித்து அப்பில்லையைக் கல்வத்திட்டு)
பின்=மறு முறையும், எருக்கு அமுது=எருக்கம்பாலே, பிணை
போல்=பெண்யானைநீர் அரைப்புக்குச் சொன்ன எடையே
விட்டு, பின்னவே அரைத்து=நன்றாய்ச் சிக்கும்படி யரைத்து,
முன்படி பிரியாது செய்=முன்புடம் எவ்வாறுஎருவளவு அரை
ப்பளவு செய்யப்பட்டதோ அந்த விதியை விட்டு விடாமல்
புடம் போடு, (பிறகு பதினோராவது நாளின் காலையில் பிரித்து
ப்பார்த்தால்) பிறைபோல் நிறக்கும் = மூன்றாநாட் சந்திரன்
நிறம்போன்ற நிறத்தை யுடையதாயிருக்கும்,(இப்படி முடிந்த)
அது=அப்பவழ பற்பமானது, வெப்பமுதல் பிணியான பின்
னும் நோய்களுக்கு = உஷ்ணம் (அல்லது ஜ்வரம்) முதலிய
நோய்களான தொந்த ரோகங்களுக்கு, பிளிறு ஆளி ஒக்கும்=
(அவைகளைப் போக்குவதினால்) கர்ச்சிக்கின்ற ஆளியின் பலத்
தையுடைய தாகும், பிடியானை ஒக்கும்=(நோய் நீங்கின சரீர
த்திற்குப் பலங்கொடுத்து ஆதரிப்பதனால்) பெண் யானையின்
பலத்தை யுடையது மாகும், பிரசத்தில் உண்ணின் = (இந்தப்
பவழ பற்பத்தில் அநுபவப்படி ஆளும் அளவை) தேனில் சாப்
பிட்டால், மதிபிசக பரக்கும்=புத்தியானது தவறும்படி முழு

(இன்னும் வரும்) —மா. வடிவேலு முதலியார்.

"தேசபாஷைகளை அசட்டை செய்தல்"

கனவான்களே! நேயர்களே!

தயவு செய்து நமது சிந்தாமணியை வாசிக்கும் நண்பர்கள் இதன்கீழ் வரும் விஷயத்தை கொஞ்சம் கவனித்து வாசிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது தேசமாகிய இந்தியாவில் வழங்கும் பாஷைகளோ எண்ணிறைந்தவைகளாயிருப்பினும் நம்மாகாணமாகிய சென்னை மாகாணத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்துஸ்தானி, இவைகள் தான் முக்கிய தேசபாஷைகளாக வழங்கப்பட்டு வருகிற தென்பது யாவருமறிந்த விஷயமே. ஆனால் இவைகளில் தமிழும் தெலுங்கும் மிகவும் முக்கியமான பாஷைகளாக வழங்கி வருகின்றன. சுமார் ஒருவருஷத்திற்கு முன் கல்வி இலாகா டைரெக்டர்களின் கான்பரென்ஸ் நடந்த போது யூனிவர்சிடி பரிக்ஷைகளுக்கு தேசபாஷை பாடங்கள் கட்டாயப் படிப்பாக செய்ய வேண்டுமென்று சொல்வது வீண்பேச் சென்று நமது கல்வி இலாகா டைரெக்டராகிய கனம் ஸ்டோன் துரை அவர்கள் சொன்னாரென்பது பத்திரிகைகளில் வாசித்திருக்கலாம். அவ்விதம் சொன்னதானது அவருடைய குற்றமன்று. அது நம்முடைய குற்றமே. அதெப்படியெனில், ஒருவர் கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்ததும் அவர் பேசுவதும் எழுதுவதும் ஆங்கிலத்திலேயே எழுதவும் பேசவும் முயற்சிக்கிறார். ஆங்கிலத்திலே ருபசுத்தமாகப்பேசத் தெரியும் வரையில் எப்படிப் பேசுகிறார்களென்பதைச்சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது. பாதி ஆங்கிலமும் பாதி (தேச பாஷை) தமிழும் பேசுகிறார்கள். இப்படிப் பேசுவதினால் இரண்டு பாஷையையும் கெடுத்து விடுகின்றார்கள். சென்னைமா நகரில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகைகளைப் பார்த்தால் தமிழ்ப் பத்திரிகைகளை விட ஆங்கில பத்திரிகைகள் தான் அதிகமாயிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் இப்பொழுது புதிதாக இரண்டொரு தமிழ்ப் பத்திரிகைகள் ஏற்பட்டிருக்கின்ற தாயினும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு இருக்கும் மதிப்பும் ஊக்கமும் சந்தா தாரர்களும் இருக்கமாட்டா வென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். இதற்கு காரணமென்ன வெனில் அரை குறையாக ஆங்கிலங் கற்றவுடனே தேசபாஷைப் பத்திரிகைகளை கையில்கூட தீண்டுவதில்லை. செவ்வையாக அர்த்தம் தெரியா விடினும் ஆங்கிலப் பத்திரிகைகளையே வாசிக்க பிரியப் படுகின்றார்கள். அவர்கள் தேசபாஷைப் பத்திரிகைகளை வாசிக்கவும் தேசபாஷைகளில் பேசவும் நிரம்பவும் வெட்கப் படுகின்றார்கள்.

பொது மேடைகளிலும் பொதுச் சபைகளிலும் அக்கிரா சனம்வகித்தும் உபன்னியாசகராகவும்இருந்து பேசும்படிக்கேட்டுக் கொண்டால் பி-ஏ, எம்-ஏ, பி-எல், எம், எல், முதலான உயர்ந்த பரிக்ஷைகளில் தெரிய கனவான்கள் பலர் தமிழில் அல்லது தேச பாஷைகளில் பேச அசக்தனு யிருக்கிறேன் என்று தமது பிரசங்க ஆரம்பத்தில் கொஞ்சம்கூட வெட்க மன்னியில் சொல்லிவிட்டு ஆங்கிலத்தில் பேசுவதே ஒருகௌரவமாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். அது ஒருபோதும் கௌரவமாகமாட்டாது. இந்தியாவிலேயே வசித்தும் வாசித்தவர்களாகிய இவர்கள் தான் இம்மாதிரி சொல்லுகிறார்கள். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரிக்ஷையில் தேர்ந்து தென் ஆபிரிக்கா முதலிய தேசங்களில் வசித்தவரும் மகாத்மா எனப் பெயர் பெற்றவருமானஸ்ரீமான் காந்தி அவர்கள் கல்கத்தாவில் கூடின எல்லா இந்தியஜனசமூக ஊழிய கான்பரென்சில் அக்கிராசனம் வகித்துப் பேசியதில் சிலபின் வருமாறு,

"ஆங்கிலத்திற்கு அடிமையாக ஆய்விட்டோம்!"

ஜனசமூகத்திற்கு நாம் செய்யக்கூடிய ஊழியங்களில் மிகவும் சிறந்தது என்ன? நமக்கு நாம் சுவாதீனம் பெறுவதும் ஆங்கில பாஷையைக்கற்கும் விஷயமாய் ஜன சமூகத்தினருக்குள்ள மூடமதிப்பைப் போக்குவதுமாம். நமது கல்விச்சாலைகளிலே ஆங்கிலத்தின் மூலமே போதனை நடந்து வருகிறது. அதே தேசபாஷையாயும் ஆய்வருகிறது. நமது சிறந்த யோசனைகளை யெல்லாம் ஆங்கிலத்திலேயே நாம் வெளியிடுகிறோம். உயர்ந்த குடும்பங்களில் ஆங்கிலமே சடுதியில் தாய்ப்பாஷையாக ஆய்விடுமென லார்டு செம்ஸ்போர்டு கருதுகிறார். ஆங்கிலத்தில் பயிற்சி பெற வேண்டுமென்ற நம்பிக்கைக்கு நாம் அடிமைகளாய் விட்டோம். அதனால் ஜன சமூகசேவைக்கு, நாம் தகுதியற்றுப் போய்விட்டோம். ஆங்கிலத்தின் மூலமே கல்விச்சாலைகளில் போதனை நடந்து வருவதால் நமது ஞானம் ஒதுங்கி மூலையில் கிடக்கிறது. பாமரர்களி னின்று நாம் விலகி நிற்கிறோம். நமது ஜாதியினரில் மேதாவிகளா யுள்ளவர்களின் ஞானம் பிறருக்கு பயன் படாதபடி கூண்டில் அடைபட்டுக் கிடககிறது, நமக்குக் கிடைத்துள்ள புதிய உத்தேசங்களை நம்மிட மிருந்து ஜனசமூகத்தினர் பெற்றுக் கொள்ள முடியவில்லை. விஷயங்களை உணர்ந்து ஒழுங்கு படுத்திக்கொள்ளாமல் அன்னிய வார்த்தைகளை மனப்பாடம் பண்ணுவதிலும் அவ்வார்த்தைகளின் உச்சரிப்பை கிரஹித்துக் கொள்வதிலும் சென்ற 60-வருஷகாலமாக நாம் காலம் கழித்து வந்திருக்கிறோம், நமது பெற்றோர்களிடமிருந்து தெரிந்து கொண்ட விஷயங்களைக் கொண்டு மென்மேலும் நாம் அபிவிருத்தி யடையாமல் தெரிந்து கொண்ட விஷ

யங்களை மறந்து வந்திருக்கிறோம். இது நமது ஜாதியினருக்குள்ள பெருவிபத்தாகும்.

"தேசபாஷைகளை கைதூக்கி விடுங்கள்"

எனவே முதலாவதாக நாம்செய்யக்கூடிய மிகச்சிறந்தசமூக ஊழியம் என்னவென்றால் நமது தேசபாஷைகளைக் கவனிக்க முயலுவதும், ஹிந்திபாஷையை ஜாதீய பாஷையாகச்செய்வதும் நடவடிக்கைகளை யெல்லாம் தேசபாஷைகளில் நடத்தத்தொடங்குவதும் ஜாதீய சம்பந்தமான காரியங்களை ஹிந்திபாஷையில் செய்யப் பார்ப்பது மாகும், நமது பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் தேசபாஷைகளின் மூலம் போதனை நடக்கும் ஏற்பாடு வரும் வரையில் நாம் நமது முயற்சியில் குன்றக்கூடாது. நமது ஆங்கிலர் நண்பர்களுடன் பேசவேண்டி ஆங்கிலத்தில் நாம் பேச வேண்டுமென்ற அவசியமும் இருத்தலாகாது. ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும் ஹிந்திபாஷையைத் தெரிந்து கொள்ளவேண்டும், வியாபாரத்தை நடத்துவதற்கு ஹிந்திபாஷை அவசியமாய் இருத்தல் பற்றி, அப்பாஷையைப் பெரும்பாலான ஆங்கில வியாபாரிகள் கற்றுக்கொள்ளுகின்றனர். நமது சட்ட சபைகளிலே நடவடிக்கைகள் யாவும் தேச பாஷையில் நடக்கும்படியான நற்காலம் சீக்கிரம் வரவேண்டும். சட்ட சபை நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுவதால் அந்நட வடிக்கைகளை நமது சமூகத்தினர் இன்றளவும் உணர்ந்து கொள்ள முடியவில்லை, இத்தீமையைச் சிறிது குறைக்க நம் தேசபாஷைப் பத்திரிகைகள் முயன்று வந்திருக்கின்றன; என்றாலும் அத்தீமையை முழுதும் போக்கிவிட அப்பத்திரிகைகளால் முடியவில்லை மேதாவிகளுக்கு பிறப்பிடமாயுள்ள இப்புராதனமான தேசத்திலே கவிசிரேஷ்டரான டாகூரும் சாஸ்திர விற்பன்னராகவும் ரஸாயன ஞானியானவராயும் நம்மில் ஜனித்திருப்பதிலே என்ன ஆச்சரியம்? என்றாலும் அத்தகைய கல்விமான்களுக்கு எவ்வளவு துக்கம்பாருங்கள். தேசபாஷையைப் பற்றிய விஷயம் ஜனசமூக ஊழியத்தின் ஓர் அம்சமாகுமோ என்று சிலர் நினைக்கக் கூடுமாயினும் அவ்விஷயத்தைப் பற்றி நெடுந்தூரம் பேசி விட்டதற்கு என்னை நீங்கள் மன்னிப்பீர்களாக. ஆயினும் நமது கல்வி முறையிலே வேரோடிப் போய்விட்ட பெருந்தீமை யாதெனில் தேசபாஷைகள் அலக்ஷியம் செய்யப்பட்டிருப்பதாகும். இதனால் ஜாதீய முயற்சிகள் பலவும் முட்டுப்படுகின்றன. ஆனது பற்றி அவ்விஷயத்தை இவ்வளவு தூரம் நான் முக்கியமாகக் குறிப்பிடலானேன்.

மேல்கண்டபடி ஸ்ரீமான் மகாத்மாகாந்தி அவர்கள் சொன்னதை மிகவும் கவனமாய்ப் படிப்பார்களென நம்புகிறேன்.

மகாயுத்தம் காரணமாக ஏற்பட்டிருக்கும் காகிதப் பஞ்சத்தினால் பல தேச பாஷைப் பத்திரிகைகள் நின்று போய்விட்டதல்லவா! ஏன்? ஆங்கிலப் பத்திரிகைகளை ஆதரிக்கின்றாப்போல் தேசபாஷைப் பத்திரிகைகளை ஆதரித்து வந்திருந்தால் இந்தக் காகிதப் பஞ்சமானது என்ன செய்யக் கூடுமென்று சற்று சிந்தித்து பாருங்கள். கடவுள் கிருபையால் இம்மகா யுத்தமானது கூடிய சீக்கிரம் முடிவடைந்து காகிதப் பஞ்சமெனும் இப்பெரும் பஞ்சமானது அறவே யொழிந்து இன்னும் பல நூற்றுக்கணக்கான தேசபாஷைப் பத்திரிகைகள் ஏற்பட்டுநமது தேசத்துக்கு பெரு நன்மை உண்டாகும்படி பண்டித சிரோண்மணிகளும் கனதனவான்களும் கவனிப்பார்களாக. அதோடு கவர்ன்மெண்டாரும் ஸ்ரீமான் காந்தி அவர்கள் சொன்னவற்றையும் கவனித்தால் நலம் நண்பர்கள் எல்லோரும் இதை அவசியம் கவனித்து வாசிக்கவேணுமாய் மறுபடியும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் அபிமானி, திருச்செங்கோடு.

நீதி மொழி

தேங்கெழு சலத்தைச் செங்கையா லள்ளி
ஆங்கெழு விடாயி லருந்துதல் தீது (10)

நடைதரு மனையில் நற்றுயில் கொளும்போ
திடையினி லுடையற் றிருப்பது தீது. (11)

பல்வகை நிதியும் பாழ்பட லியல்பால்
செல்வர்தம் வாழ்விற் செருக்குறல் தீது. (12)

தருக்குடையவருஞ் சாதலால் அந்தோ
பிறர்க்கிடர் புரிதல் பேசொணாத் தீது. (13)

எண்ணரும் வறுமைக் கீடுபட்டிடினும்
பெண்வழி யொழுகிப் பிழைப்பது தீது (14)

மெய்வாய்கண் ணெனமேவு ஐம்பொறியைத்
துய்வாலடிக்கடி தொடுவது தீது (15)

கூடகநடிப்பைக் குலைக்குறாய் நயவா
நாடக நடிப்பை நயவுதல் தீது. (16)

அடைக்கலப் பொருளை அடுத்தவர்க் கிடரை
திடத்தொடு கொள்ளுதல் செய்குதல் தீது (17)

வீடெனு நான்கு விழுப்பொருள் விரும்பார்
பீடுயரியல்பும் பெற்றியுந் தீது. (18)

மாடசாமிப் பண்டாரம், தென்காசி.

பலவகைக் குறிப்புகள்

சட்ட சபையில் காலி ஸ்தானம்:—ராஜப் பிரதிநிதி சட்ட சபையில் ஸர் இப்ராஹிம் ரஹிமதுல்லா வகித்து வந்த ஸ்தானம் இப்போது காலியா யிருப்பதால், அதற்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத் தனுப்புமபடி பம்பாய் சட்ட சபையின் உத்தியோகப் பற்றில்லாத மெம்பர்கள் கேட்டு விடப்பட்டிருக்கின்றனர்.

புதிய அஸ்ஸாம் சீப் கமிஷனர்:—சமைம பியாட்சன் பெல் அஸ்ஸாம் மாகாணத்தின் சார்ஜ் ஒப்புக்கொண்ட தேதி முதல் சீப் கமிஷனராய் உத்தியோகம் பார்க்கும்படி இவ்வாரத்திய கெஜட்டில் நியமனமா யிருக்கிறது

இந்தியா கெஜட்டு விளம்பரங்கள் —சென்றவாரத்தியகெஜட்டில் பிரசுரமாயிருக்கும் ஒரு முக்கிய விஷயமாவது:—

இந்தியத் தளவாட சபையின் ஒரு பிரிவாகிய கப்பற்கட்டும் இலாக்கா கண்டிரோல்லரின் எழுத்து மூலமான அனுமதியில்லாமல், எத்தகைய படகு அல்லது மரக்கலங்களை பழுது பார்க்க விருந்தாலும், அதற்கான இரும்புத் தகடுகளை (1'8-அங்குலத்துக்கு மேற்பட்டதை) யாவரும் உபயோகிக்கக் கூடாது.

ஸ்ரீமான் கோக்கலேயின் உருவச்சிலை:—ராஜப் பிரதிநிதி லார்ட் செம்ஸ் போர்ட் நாளது 22-ந்தேதி யன்று சட்ட சபை மண்டபத்தில், ஸ்ரீமான் கோகலேயின் உருவச்சிலை யொன்றைத் திறந்து வைப்பார். ராஜப்பிரதிநிதி சட்ட சபையின் ஐரோப்பிய மெம்பர்கள் தாமாகவே சந்தா வசூலித்து சலவைக் கல்லினால் மேற்படி சிலையைக்கட்டி வைத்திருக்கின்றனர். தலைமுதல் இடுப்பு வரையில் தான் ஸ்ரீமான் கோகலேயின் உருவம் அதனில் செதுக்கப்பட் டிருக்கிறது.

பெட்ரோல் எண்ணெய்க்குப் பஞ்சம்:—மோட்டார் வண்டிகளுக்கு இன்றியமையாத பெட்ரோல் எண்ணெய் பர்மாவிலிருந்து வரவேண்டி யிருப்பதால், போனமாதம் அங்கிருந்து புறப்பட்ட ஒரு பெட்ரோல் கப்பல் தீப்பிடித்து எரிந்து போனதைக் கேட்ட பம்பாய் பெட்ரோல் வியாபாரிகள் திடுக்கிட்டுப் போயினர். வேறு கப்பல் பர்மாவிலிருந்து புறப்பட்டதாயும் தெரிய வில்லை. நிலைமை மறுபடியும் மோசமாய்ப் போய்விட்டது. சென்னையிலிருந்து பிரதி தினமும் ஒருவண்டி நிறைய பெட்ரோல் பம்பாய்க்கு ஏற்றிக்கொண்டு போகப்படுகிறது.

கிராமமுன்சீப்கோட்.

கம்ப்ளீட்மானுயல்.

இப்புத்தகம் கிராமமுன்சீப், மணியம், கர்ணம் முதலான கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பூஸ்திதி விசேஷமுடைய பெருந்தன்மையான குடிகளுக்கும், பெரிதனக்காரருக்கும், இனும்தார், சோத்திரியம்தார், மிட்டாதார், ஜமீன்தார் முதலான சகல உத்தியோகஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமான சட்டங்களும் இந்தியன் பீனல்கோட் புதியகிரிமினல் புரோசீடர் கோட் இவற்றில் முக்கியமான பிரிவுகளும் கிராமபொலீஸ்ரூல்களும் ரெவுனியூ லிமிடேஷன் ரிஜிஸ்ட்ரேஷன் பஞ்சாயத்து கோர்ட்கெட்டணம் தேவஸ்தானஆக்ட் முதலியனவும் நாளதுவரையில் செலாமணியாகிய எல்லா சீர்த்திருத்தங்களும் சேர்த்து (கிராம முன்சீப் கோட் கம்ளீட்மானுயல்) என்னும் பெயர்கொடுத்து அச்சிட்டிருக்கிறது-50-பவுன் கிளேஸ் கடிதம் ராயல்சயிஸ் பெரிய பதிப்பு.

இதன் விலை ரூபா 3 0 0

இந்தியா சாட்சி ஆக்ட்டு.

இந்த சாட்சிஆக்டில் முன்சீப் கோர்ட்டு, சிவில் கோர்ட்டு, கிரிமினல் கோர்ட்டு, செஷன் கோர்ட்டுமுதலிய எல்லா கோர்ட்டுகளின் சாட்சி நிபந்தனைகளும் சாட்சிகளின் யோக்கியதா பரீட்சைகளும், இன்னவிதமாய் சாட்சிவிசாரிக்க வேணுமென்கிற அமைதிகளும் அனேகர்கூடிய சாட்சி பரிவர்த்தனைகளும் இன்னசாட்சி கூடும் கூடாதென்பதையும் சுலபமாய் தெரிந்துகொண்டு நடத்த வேண்டிய ரூல்சுகள்யாவும் அடங்கியிருக்கிறது.

இதன் விலை அணா -12.

புதிய ஸ்டாம்பு ஆக்ட்டு.

இந்தியா தேசத்தில் எல்லாஜில்லாக்களும் கண்காணி தோட்டதொழிற சாதனங்களும் கப்பல் வியாபாரிகளுக்குறிய நிபந்தனங்களும் சாதனம் பிரிவினை ஒப்பந்தம் குத்தகை பலவித உடன்படிக்கை தருமநிர்ணயம் சீதனசாசனம் பங்குகள் கூலிகள் வாயதா இன்ஷூரன்சு பவர் ஆப் அடார்னி ரத்துச்சீட்டுகள் ட்ரூன்சுபர் மதிப்புநிர்ணயம் இதரமான யெல்லா விவகாரங்களைக்குறித்தும் ஸ்டாம்புகளும் ஸ்டாம்புகட்டணங்களும் இவ்வளவென்பதை சுலபமாய் தெரிந்துக்கொள்ளலாம்.

இதன் விலை அணா-8.

8-வது ஆக்ட்டு.

குத்தகைத் தொகை வசூல்செய்வதைக்குறித்து நடத்தவேண்டிய நடவடிக்கைகளும், குத்தகைதார்கள் இனும்தார்கள் நடந்துகொள்ளவேண்டிய யோர்ப்பாடுகளும், தாசில்தார் ஜமீன்தார் முதலியவர்கள் நடத்தவேண்டிய நடவடிக்கையைக் குறித்தும், நிலத்துக்குறியோர் மனுசெய்யவேண்டிய அம்சங்களும் அடங்கியது.

இதன் விலை அணா-8.

மானேஜர், 'கலாசிந்தாமணி' மயிலாப்பூர், மதராஸ்.